ஆகிய நான்கு படங்கள் 1961-ல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. 1962-ல் ஒரு படமும் வெளியிடப்படவில்லை.

(இ) ரூ. 2,54,917.85.

(உ) தற்சமயம் இரண்டு துணுக்குப் படங்கள் உள்பட 5 படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நடைமுதல் ஆண்டில் இந்த வகையில் ரூ. 85,000 செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1964-65-ல் ரூபாய் ஒரு லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

Registration Offices

* 102 *Q.*—Sri N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) whether there is any proposal to electrify all the Registration offices and Sub-Registrar's offices in the State; and

(*b*) if so, the action taken so far?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) குடியிருப்பு வீடுகளாகப்பிராத அரசாங்க கட்டிடங்கள் எல்லாவற்றிற்கும் படிப்படியாக மின்சார இணைப்பு தருவதற்கும், மின்சார விசிறிகள் போடுவதற்குமான திட்டம் ஒன்றை அரசினர் பொதுவாக அங்கீகரித்துள்ளனர். இத்திட்டத்தில் பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டிடங்களும் அடங்கும்.

(இ) பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்கள் அமைந்துள்ள 266 அரசாங்கக் கட்டிடங்களில் இதுவரை 135 கட்டிடங்களில் மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது.

Prevention of overload in lorries

* 103 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Lorry-Owners Association, Tirunelveli, has requested the Government to take steps to put an end to the overloading of lorries; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ)—(இ) சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, மேஜை மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 161வது பிரிவின்கீழ் போலீஸ் சூப்பிரன்டென்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படுவதாக இருக்கிறது. இதில் குற்றம் செய்யாதவர்கள் தண்டிக்கப்படுவதற்கு முன்பு பதிலளிக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போய் விடுகிறது. முன்பு R.T.A யிடம் இந்த சந்தர்ப்பம் இருந்தது. போலீஸ்காரர்களிடம் அதிகாரம்

[a] 65–66-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

தரப்படுவதால் டிரைவர்கள் குற்றச் சாட்டுக்கு பதில் சொல்ல முடியாமல் தண்டிக்கப்படுவார்கள். அதைத் தவிர்க்க என்ன உத்தேசம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி பதில் கூற சந்தர்ப்பம் அளிக்கவில்லை என்று குறிப்பாக எழுதி அனுப்பினால் அது பரிசீலனை செய்யப்படும். சாதாரணமாக ஓவர்லோடிங்கை தடுக்க கொஞ்சம் கடினமாகத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவகாசம் கொடுத்து, எக்ஸ்பிளனேஷன் கேட்டு, எக்ஸாமின் பண்ணிக் கொண்டு இருந்தால் உடனடியாக ஓவர்லோடிங்கை தவிர்க்க முடியாது. ஆனால் நடைமுறையில் ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் அது பற்றி எழுதி அனுப்பினால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, குற்றம் செய்யாதவர்கள் தண்டிக்கப்பட்டு விடுகிறார்கள். ஆகவே இதில் கவனம் செலுத்தப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : குற்றத்தை தடுக்க வேண்டும் என்பதில்தான் சர்க்காரின் முழு கவனமும் இருக்கிறது. அதை எப்படி நிறைவேற்றுவது என்பதில்தான் கஷ்டங்கள் இருக்கின்றன. ஒரு வண்டி ஓவர்லோடில் போகிறது என்றால் அங்கேயே அதைப் பிடித்து நடவடிக்கை எத்தால்தான் நலமாக இருக்கிறது. அதை விட்டு அவர்கள் மீது புகார் எழுதி எக்ஸ்பிளனேஷன் கேட்டு மெமோ கொடுத்து அதற்குப் பிறகு தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் ஓவர்லோடோடு வண்டி ஓடிக் கொண்டே இருக்கும், எக்ஸ்பிளனேஷன் மீது நடவடிக்கை எடுக்க எக்ஸாமினேஷன் நடந்து கொண்டே இருக்கும். குற்றத்தை தடுக்க முடியாது.

திரு. எம். எஸ். மணி : ஸார், லாரிகள் ஓவர்லோடு ஏற்றிக் செல்கிறது என்று குற்றம் சாட்டும் பொழுது அந்த லாரியின் உரிமையாளர்கள் தண்டிக்கப்படுகிறாரா அல்லது டிரைவர் தண்டிக்கப்படுகிறாரா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சட்டப்படி இரண்டு பேரையும் தண்டிக்கலாம்.

சென்னை உயர்நீதி மன்றத்தில் முடிவாகாமலுள்ள வழக்குகள்.

*104 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை உயர்நீதி மன்றத்தில் 1963 ஜூலை முடிய விசாரணை முடிவு பெறாமல் இருக்கும் சிவில், கிரிமினல் வழக்குகள் முறையே எத்தனை?

(இ) அவைகளில் (1) ஐந்தாண்டுகளாக முடிவு பெறாமல் இருக்கும் வழக்குகள் (2) மூன்றாண்டுகளாக முடிவு பெறாமல் இருக்கும் வழக்குகள் எத்தனை?